தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென் தமிழகத்தில் மழை வாய்ப்பு

**சென்னை,**

இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் தென் தமிழகத்தில் ஆங்காங்கே புதன்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென்கிழக்கு வங்கக் கடலில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகி இலங்கைக்கு அருகே வந்துள்ளது. இதன் காரணமாக தென் தமிழகத்தில் புதன்கிழமை ஆங்காங்கே லேசான மழை பெய்யும். இது வலுவடைய வாய்ப்பில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

### "சுங்கம்' ரக மீன்கள் சிக்கின: மீனவர்கள் மகிழ்ச்சி



**புதுச்சேரி,**

சுங்கம் ரக மீன்களுடன் புதுச்சேரி தேங்காய்த் திட்டு மீன்பிடித் துறைமுகத்தில் கரையேறிய மீனவர்கள.

ஏற்றுமதி தரம் வாய்ந்த சுங்கம் ரக (டூனா பிஷ்) மெகா சைஸ் மீன்கள் செவ்வாய்க்கிழமை அதிகளவில் சிக்கியதால், புதுவை மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் அடுத்த மாதம் வர உள்ள நிலையில், புதுவை மீனவர்கள் மீன் பிடி தொழிலில் தீவிரம் காட்டி வருகின்றனர். எனினும் மீன் வளமின்மை காரணமாக சிறு விசைப்படகுகளை நம்பியுள்ள பல மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆழ்கடல் மீன்வளத்தை நம்பியுள்ள மீனவர்கள் ஓரளவுக்கு புதிய ரக மீன்களை பிடித்து வந்து தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் அண்மையில் ஆழ்கடலுக்குச் சென்று செவ்வாய்க்கிழமை திரும்பிய புதுவை மீனவர்கள், அரிய வகை சுங்கம் ரக (டூனா பிஷ்) மீன்களை அள்ளி வந்துள்ளனர்.

புதுவை நல்லவாடு முருகசாமியின் விசைப் படகில் சென்று திரும்பியுள்ள மீனவர்கள் கூறியது: நாங்கள் கடந்த 15 நாள்களுக்கு முன் விசைப்படகில் சென்று ஆழ்கடலில் தூண்டியலிட்டு அரிய வகை சுங்கம் ரக மீன்களை பிடித்து வந்துள்ளோம்.

ஏற்றுமதி தரம் வாய்ந்த இந்த மீன்கள் கேரளாவிற்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து வியாபாரிகள் மூலம் வெளி நாடுகளுக்கு இந்த மீன்கள் விற்பனைக்கு ஏற்றுமதி செய்யப்படும். இந்த மீன்கள், 15 கிலோ முதல் 100 கிலோ எடை அளவில் இருக்கும். தற்போது 50 கிலோ முதல் 90 கிலோ அளவுடைய மீன்கள் அதிகளவில் கிடைத்துள்ளன.

எங்களுக்கு முன்பு, நேற்று வந்த மீனவர்களிடம் மொத்தம் 7 டன் அளவில் 300 மீன்கள் வரை கிடைத்துள்ளன. அவை கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. எங்களிடம் 130 மீன்கள் வரை (3 டன்கள்) கிடைத்துள்ளன. இதுவும் எடையிட்டு கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் உதவியுடன் இந்த பெரிய மீன்களை நாங்கள் தூண்டில் போட்டு பிடித்து வந்துள்ளோம். மாமல்லபுரம், ஒடிஸா கடல் பகுதியில் இந்த வகை மீன்கள் கிடைக்கின்றன. இவை ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.140 வரை விற்கப்படுகிறது. தற்போது கிலோ ரூ.80-க்கு விற்கப்படுகிறது. ஈஸ்டர் பண்டிகை காலம் என்பதால் மீன் பயன்பாடு குறைந்து விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது சீசன் என்பதால் அதிகளவு மீன்கள் கிடைக்கின்றன. இருந்தாலும் ஆழ்கடலுக்குச் சென்று வருவதால் செலவினம் அதிகரிக்கிறது. மீன் கிடைக்காமல் போனால், நஷ்டம் ஏற்படவும் வாய்ப்புள்ளது என்றனர்.

## 26-இல் தமிழகத்துக்கு கிருஷ்ணா நீர் திறப்பு

**சென்னை,**

தமிழகத்துக்கு வரும் 26-ஆம் தேதி முதல் கிருஷ்ணா நீர் மீண்டும் திறந்து விடப்பட உள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு வந்துகொண்டிருந்த கிருஷ்ணா நீர், கடந்த 10-ஆம் தேதியன்று நிறுத்தப்பட்டது. ஆந்திரத்தில் இரண்டாம் சாகுபடி காலம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தமிழகத்துக்கு வர வேண்டிய நீர் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் சென்னையின் கோடைகால குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழகத்துக்கான நீரை மீண்டும் திறந்து விடுமாறு பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஆந்திர அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து தமிழகத்துக்கு மீண்டும் தண்ணீர் திறந்து விடுவதாக ஆந்திர அதிகாரிகள் உத்தரவாதம் அளித்துள்ளனர். இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியது: ஆந்திர மாநிலத்தில் இரண்டாவது பாசனக் காலம் நடைபெற்று வருவதால், தமிழகத்துக்கு தாற்காலிகமாக தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. வரும் 26 -ஆம் தேதி முதல் மீண்டும் தண்ணீர் திறந்து விடப்போவதாக ஆந்திர அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வறட்சியால் கருகிய சூரியகாந்தி பூக்கள்: இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

**காரியாபட்டி,**

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி பகுதியில் போதிய மழை இல்லாத காரணத்தினால் செடியிலேயே சூரியகாந்தி பூக்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். காரியாபட்டி பகுதியில் அழகியநல்லூர், வரலொட்டி, அல்லாளப்பேரி, சூரனூர், கெப்பிலிங்கம்பட்டி, தோணுகால்,

பிச்சம்பட்டி ஆகிய கிராமங்களில் மக்காசோளத்திற்கு அடுத்தபடியாக சூரியகாந்தி பயிரிடப்பட்டு வருகிறது.

ஆனால் போதிய மழை இல்லாத காரணத்தினால் சூரியகாந்தி பூ வரும் பருவத்தில் கருகி விட்டது. கிணற்றுப் பாசனம் உள்ள சில கிராமங்களில் குறைந்த அளவுத் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்றனர்.

இருப்பினும் முழுமையான வளர்ச்சி இன்றி சூரியகாந்தி காணப்படுவதால் அதன் விதைகள் குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்படும் நிலை உள்ளது.

இதனால் ஆர்வமுடன் பயிரிட்ட விவசாயிகள் தற்போது கவலையுடன் உள்ளனர். சூரியகாந்தி பயிரிட ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை செலவிட்டதில் ரூ.20 ஆயிரம் கூட திரும்பக் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

மக்காசோளம் கடந்த ஆண்டு ரூ.1600 குவிண்டாலுக்கு கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு ரூ.1200 மட்டுமே விலை கிடைத்துள்ளது. மேலும் விளைச்சலும் குறைந்து உள்ளது.

இதுகுறித்து விவசாயி கருப்பசாமி கூறும்போது, போதிய மழை இல்லாத காரணத்தால் சூரியகாந்தி பயிரிட்ட பெரும் பாலான இடங்களில் கருகி விட்டன.

இந்த ஆண்டு விவசாயிகளுக்கு கடும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளின் நலன்கருதி அரசு சார்பில் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

## அமராவதி அணையில் விரிசலைச் சீரமைக்க இதுவே தருணம்!

**உடுமலை,**

அமராவதி அணை வறண்டு கிடக்கும் நிலையில், அணையின் 5-ஆவது ஷட்டரின் கீழ்பகுதியில் உள்ள விரிசலைச் சீரமைக்க இதுவே தருணம் என்று, மூன்று மாவட்ட விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுமலையில் இருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அமராவதி அணை. 90 அடி உயரம் கொண்ட இந்த அணையின் மொத்தக் கொள்ளளவு 4,035 மில்லியன் கனஅடி. மேற்குத் தொடர்ச்சி மலையில் 840 சதுர கி.மீ. இதன் நீர்ப்பிடிப்புப் பகுதியாக உள்ளது. உற்பத்தியாகும் இடத்தில் இருந்து 192 கி.மீ.

பயணம் செய்து, திருச்சி- முக்கூடல் என்னும் இடத்தில் காவிரியுடன் அமராவதி ஆறு கலக்கிறது.

1958-ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் காமராஜரால் அமராவதி அணை திறந்து வைக்கப்பட்டது. திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த பழைய, புதிய ஆயக்கட்டுப் பகுதிகளான சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தற்போது பாசன வசதி பெற்று வருகின்றன.

குறிப்பாக மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த பல நூறு கிராமங்களின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதில் இந்த அணை பெரும்பங்கு வகிக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் சின்னாறு, பாம்பாறு, தேனாறு ஆகிய ஆறுகளில் இருந்து வரும் தண்ணீர் வரத்தே இந்த அணைக்கு பெரும் நீராதாரமாக விளங்கி வருகிறது.

ஆபத்தான விரிசல்: இந்நிலையில், இந்த அணையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக 5-ஆவது ஷட்டரின் கீழ்பகுதியில் உள்ள விரிசலால் அணை நீண்ட காலமாக அபாயகரமான நிலையில் இருந்து வருகிறது. இந்த விரிசல் பலமுறை ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டாலும், அரசு இவ்விஷயத்தில் எந்த அக்கறையும் காட்டாத நிலையே நீடிக்கிறது.

7 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை, அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் துறையில் இருந்துவந்த ஒரு குழு இந்த விரிசலை ஆய்வு செய்தது. அவர்கள் அளித்த ஆய்வறிக்கைக்குப் பின், பொதுப்பணித் துறையில் இருந்தும் ஒரு குழு வருகை தந்து, இந்த விரிசலை பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்தது.

இந்த இரு குழுக்களும் தங்களது ஆய்வறிக்கைகளை அப்போதைய அரசிடம் தாக்கல் செய்தன. இந்த இரு அறிக்கைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்ததால், எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டது.

தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழைகள் பெய்யும்போது முழுக் கொள்ளளவை எட்டும் நிலையில், அணை அபாயகரமான சூழ்நிலைக்குத் தள்ளப்படும். அப்போது பொதுப்பணித் துறையினர் அவசர கதியில் தண்ணீரை வெளியேற்றுவர். உரிய முறையில் அணையில் சேமித்து வைக்க முடியாததால், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

அணை முழுக் கொள்ளளவை எட்டும்போதும், அசாதாரண சூழ்நிலை ஏற்படும்போதும், அணையில் உள்ள 9 ஷட்டர்களில் முதல் மூன்று ஷட்டர்களும், கடைசி மூன்று ஷட்டர்களும் மட்டுமே திறந்து விடப்படும். 4,5,6 ஷட்டரை திறந்து விட முடியாத நிலை ஏற்படும். இந்த நடைமுறையே கடந்த 20 ஆணடுகளுக்கு மேலாக பின்பற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு முறையும் அணையின் தண்ணீரை இப்படித் திறந்துவிடும் சூழ்நிலை ஏற்படும்போது, பொதுப்பணித் துறையினர் ஒருவித அச்சத்துடனும், பீதியுடனும் அணையை திறந்துவிட்டு வருகின்றனர்.

ஏற்கெனவே கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக அணையில் எந்தப் பராமரிப்பும் மேற்கொள்ளாததாலும், விரிசல், ஷட்டர்களில் பழுது போன்ற காரணங்களாலும் அணையின் ஸ்திரத்தன்மை நாளுக்கு நாள் கேள்விக்குறியாகி வருகிறது.

இந்த அச்சத்தைப் போக்குமாறும், அபாயகரமான சூழ்நிலையில் உள்ள அணையின் விரிசலைச் சரி செய்யுமாறும், அணையின் ஷட்டர்களைப் பராமரிக்குமாறும், திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்ட விவசாயிகள் தற்போது கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக அணை முற்றிலும் வறண்டு கிடக்கும் சூழ்நிலையில் அமராவதி அணையின் 5-ஆவது ஷட்டரின் கீழ்பகுதியில் உள்ள விரிசலைச் சீரமைக்க இதுவே தருணம் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிதிக்காக எதிர்பார்ப்பு: இதுகுறித்து பொதுப்பணித் துறையினர் அளித்த விளக்கம்:

அமராவதி அணையின் 5-ஆவது ஷட்டரில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக விரிசல் உள்ளது. மேலும் 9 ஷட்டர்களிலும் உள்ள ரப்பர் சீல் மற்றும் பைப் லைன்கள் அனைத்தும் நீண்டகாலமாக பழுதாகியுள்ளது. இந்தக் காரணங்களால், அணை முழுக்கொள்ளளவை எட்டும்போது தண்ணீர்த் திறப்பு உள்ளிட்ட ஒருசில நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

5-ஆவது ஷட்டரின் கீழ் பகுதியில் உள்ள விரிசல், கடந்த சில வருடங்களுக்கு முன் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட திரவ வடிமான பேஸ்ட்டினால் அடைக்கப்பட்டது. அணையைச் சீரமைக்க ரூ. 8.5 கோடி நிதி கேட்டு ஆய்வறிக்கை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்த நிதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. மேற்படி நிதி கிடைத்தால் உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதியைச் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 50.80 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 50.80 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 599 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.6 டி.எம்.சி.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 2 லட்சத்துக்கு தேங்காய் ஏலம்

**மொடக்குறிச்சி,**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 2 லட்சத்துக்கு தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 7 ஆயிரம் கிலோ கொப்பரைகளையும், 3 ஆயிரத்து 40 தேங்காய்களையும் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர் இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 85.70-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 82.55-க்கும், 2-ஆம் தரக் கொப்பரை அதிகபட்ச விலையாக ரூ.81.35-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.58.85-க்கும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 91 ஆயிரத்துக்கு விற்பனையானது. தேங்காய் அதிகபட்ச விலையாக ஒரு டன் ரூ. 28 ஆயிரத்து 400-க்கும், குறைந்தபட்சம் ரூ. 23 ஆயிரத்து 400-க்கும் மொத்தம் ரூ. 22 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில், தேங்காய் மற்றும் கொப்பரைகள் ரூ. 2 லட்சத்து 13 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையாகின.

### அதியமான்கோட்டையில் மாட்டுச் சந்தை தொடக்கம்

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் செவ்வாய்க்கிழமை மாட்டுச் சந்தை தொடங்கியது. நல்லம்பள்ளி ஒன்றியம், அதியமான்கோட்டையில் பழைமை

வாய்ந்த ஸ்ரீகாளியம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர தேர் திருவிழா 14 நாள்கள் சிறப்பாக நடைபெறும். திருவிழாவின் ஒரு பகுதியாக ஒரு வார கால மாட்டுச் சந்தை நடைபெறுவது வழக்கம்.

நிகழாண்டில் இந்த விழா திங்கள்கிழமை தேரோட்டத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதில் விழாவின் இரண்டாம் நாளான செவ்வாய்க்கிழமை மாட்டுச் சந்தை தொடங்கியது. இந்தச் சந்தையில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து விற்பனைக்காக நூற்றுக்கணக்கான பசு, காளை மாடுகள் கொண்டு வரப்பட்டன.

இதில், மயிலை காளை, மலை காளை மற்றும் சீமை, நாட்டுப் பசு ரக மாடுகள் விற்பனைக்காக வந்திருந்தன.

இந்த மாடுகளை தருமபுரி சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து வந்த விவசாயிகள் வாங்கிச் சென்றனர். ஒரு ஜோடி மாடுகள் சுமார் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை விற்பனையானது.

முன்னதாக, விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள், பொதுமக்களுக்கு விழாக் குழுவினர் சார்பில் கூழ், மோர் வழங்கப்பட்டது.

**தருமபுரியில் சதமடித்தது வெயில்**

**தருமபுரி,**

தருமபுரியில் கடந்த சில தினங்களாக வெயிலின் உக்கிரம் அதிகரித்து வரும் நிலையில், செவ்வாய்க்கிழமை 100 டிகிரியை தொட்டது.

நிகழாண்டில் பருவ மழை பொய்த்து போனதால் விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதோடு, பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் குடியிருப்புப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டமும் குறைந்துள்ளது.

இந்த நிலையில் பகல் வேளைகளில் வெயிலின் உக்கிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. செவ்வாய்க்கிழமை வெயிலின் உக்கிரம் அதிகரித்து 100 டிகிரியை தொட்டது. வெயிலின் தாக்கத்தில் இருந்து காத்துக் கொள்ள சாலைகளில்

ஆங்காங்கே முளைத்துள்ள இளநீர், தர்பூசணி, முலாம்பழம் மற்றும் கரும்பு ஜூஸ் கடைகளில் மக்கள் கூட்டம் அதிகளவில் காணப்படுகிறது.

**மக்காச்சோளப் பயிரை சேதப்படுத்திய யானைகள் விரட்டியடிப்பு**

**தருமபுரி,**

பென்னாகரம் அருகே ஓர் ஏக்கரில் பயிரிட்டிருந்த மக்காச்சோளப் பயிர்களை யானைகள் கூட்டம் திங்கள்கிழமை இரவு சேதப்படுத்தின.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே கோடுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடாசலம். இவரது நிலத்தில் மக்காச்சோளம் பயிரிட்டிருந்தார். திங்கள்கிழமை இரவு அங்கு வந்த யானைகள் கூட்டம் மக்காச்சோளப் பயிரை சேதப்படுத்தின.

இதையடுத்து, கிராம மக்கள் தீப்பந்தங்களை கொளுத்தி யானைகளை அங்கிருந்து விரட்டினர். இதுகுறித்து பாலக்கோடு வனத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

**விதைப் பண்ணையில் ஆய்வு**

**தஞ்சாவூர்,**

கும்பகோணத்தில் உள்ள அரசு விதைப் பண்ணை மற்றும் அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்களை, விதைச்சான்று இணை இயக்குநர் பி. கோவிந்தராஜன் அண்மையில் ஆய்வு செய்தார்.

அப்போது, விதை சுத்தி செய்யும் முறை, சான்றட்டை பொருத்தும் முறை போன்றவற்றை அவர் ஆய்வு செய்தார்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் விதை இருப்பு, விதைப் பரிசோதனைக் கூடப் பணிகள் பற்றியும், விதை விநியோகம் செய்யும் விதை விற்பனை மையங்களையும் இணை இயக்குநர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, விதை ஆய்வு துணை இயக்குநர் ஆர்.எஸ்.மனோகரன், விதைச் சான்று உதவி இயக்குநர் ம. மணிமாறன், வேளாண் உதவி இயக்குநர் எம். லெஷ்மிகாந்தன் உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.

## பயிறு ஒன்டர் இடுபொருளை மானிய விலையில் வழங்கக் கோரிக்கை

**சிதம்பரம்,**

உளுந்துக்கு அரசு டி.ஏ.பி. உரம் வழங்குவதை தவிர்த்து, பயிறு ஒன்டர் (பல்ஸ்ஒன்டர்) என்ற இடுபொருளை மானிய விலையில் வழங்கிட வேண்டும் என தமிழக உழவர் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அம்முன்னணியின் கடலூர் மாவட்டச் செயலாளர் சி.ஆறுமுகம் வெளியிட்ட அறிக்கை:

நிகழ் 2013-2014-ஆம் ஆண்டு நஞ்சைத் தரிசில் உளுந்து மற்றும் பயறு வகை சாகுபடிக்கு 30 மற்றும் 45 நாள்களில் இருமுறை தெளிப்பதற்காக ஹெக்டேர் ஒன்றுக்கு 25 கிலோ டி.ஏ.பி. உரத்தினை வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலமாக இலவசமாக வழங்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால், டி.ஏ.பி. வழங்குவதில் பல வகைகளில் முறைகேடுகள் நடைபெறுகின்றன.

சிறு விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகிறார்கள், பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்தத் தகவல் தெரிவிக்கப்படுவதில்லை. டி.ஏ.பி. எல்லா பயிர்களுக்கும் பயன்படுத்தப்படும் உரமாகும், ஆனால், பயிறு ஒன்டர் என்ற இடுபொருள் உளுந்து மற்றும் பயறு வகை, பயிர்களுக்கு மட்டுமே பயன்படுத்தக் கூடியது.

எனவே, உளுந்து பயறுக்கு டி.ஏ.பி. வழங்குவதை தவிர்த்து பயிறு ஒன்டர் இடுபொருளுக்கு கூடுதல் மானியம் வழங்கினால் உளுந்து பயறு மகசூலில் அரசின் இலக்கை எட்ட முடியும் என அதில் தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

**பண்ருட்டி,**

பண்ருட்டி வட்டம், புலவனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் இலவச கால்நடை மருத்துவ சிகிச்சை மற்றும் கோமாரி நோய் தடுப்பு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பண்ருட்டி ரோட்டரி சங்கம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை இணைந்து முகாமை நடத்தின. ரோட்டரி சங்கத் தலைவர் எம்.முத்துக்கிருஷ்ணன் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டி.ராமமூர்த்தி

முன்னிலை வகித்தார். மாவட்ட இணை இயக்குநர் எஸ்.மதிவாணன் முகாமைத் தொடங்கி வைத்தார்.

முகாமிற்கு கொண்டு வரப்பட்ட நூற்றுக்கணக்கான கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது. 750 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது.

தொழில் வர்த்தக சங்கத் தலைவர் டி.சண்முகம், முன்னாள் ரோட்டரி சங்கத் தலைவர்கள் சண்முகம், சம்பத்லால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வானூர் பகுதியில் தர்பூசணி விளைச்சல் அமோகம்

**விழுப்புரம்,**

வானூர் பகுதியில் பல்வேறு இடங்களில் தர்பூசணி அதிகம் விளைந்துள்ளது. கோடைகாலம் முன் கூட்டியே தொடங்கி விட்டதால் பழங்களின் விற்பனையும் சூடுபிடித்துள்ளது.

கிராமங்கள் நிறைந்த வானூர் பகுதியில் விவசாயம் பிரதானத் தொழிலாக உள்ளது. இங்கு தர்பூசணி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிபிபாக, திண்டிவனத்தில் இருந்து கிளியனூர் மற்றும் மயிலம் புதுச்சேரிக்கு செல்லும் இரு வழித் தடங்களிலும் உள்ள கிராமப் பகுதிகளில் தர்பூசணி அதிக அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு கோடை காலம் முன் கூட்டியே தொடங்கியுள்ள நிலையில், தர்பூசணி பழங்கள் நன்கு விளைச்சல் கண்டு விற்பனைக்கு பறிக்கப்பட்டு வருகின்றன. இப்பழங்களை விவசாயிகள் சாலையோரங்களில் கொட்டி வைத்து ஒரு பழம் ரூ.50 முதல் ரூ.80 வரை விற்பனை செய்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "தர்பூசணி இந்த ஆண்டு நன்றாக விளைந்துள்ளது. பழங்களுக்கு போதிய விலையும் கிடைக்கிறது. பலர் தோட்டங்களுக்கே வந்து வாங்கிச் செல்கின்றனர் என்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சப்போட்டா சாகுபடி செய்யுங்கள்**



***இன்றைய பசுமையான மரம் நாளைய பசுமையான எதிர்காலம்***

வீட்டுத் தோட்டத்தில் நடும் மரம் அலங்காரமாகவும், இலைகள் கொட்டாமலும் வருடம் முழுவதும் பசுமையாக இருக்கும் மரமாகவும், அடிக்கடி எரு, ரசாயன உரம் மற்றும் விஷப்பூச்சி மருந்துகள் உபயோகிக்கும் தேவையில்லாத மரமாகவும், கடும் கோடையில் நிழல் கொடுத்து வெயிலின் கொடுமையை குறைத்து குளிர்ச்சியின் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் மரமாகவும் இருந்தால் அது வரவேற்கத்தக்கது. இது போன்ற சிறப்பு இயல்புகளைக் கொண்டதும் மற்றும் சுவைமிக்க பழங்களைத் தருவதுமான மரம் சப்போட்டாவாகும்.

இந்த மரம் எந்த வகை மண்ணிலும் செழித்து வளரக் கூடியது. நல்ல வடிகால் வசதி கொண்ட மண் இதற்கு மிகவும் ஏற்றது. மண்ணிற்கு கீழ் கடினமான பாறைகள் சுமார் ஆறு அடி ஆழம் வரை இல்லாது இருப்பின் மிகவும் நல்லது. ஆழமான வண்டல் மண் கலந்த நிலம் ஏற்றது. ஓரளவு உப்புத்தன்மை கொண்ட பாசன நீர் ஆகியவற்றை தாங்கி வளரும் தன்மை பெற்றது. சப்போட்டா மரத்தை வீட்டுத் தோட்டத்தில் காம்பவுண்டு சுவரிலிருந்து நான்கு அடி தள்ளி நடுவது நல்லது. சேலத்தில் ஒரு வீட்டில் நுழைவு வாயிலில் அலங்காரமாக நின்று நம்மை வரவேற்கிறது. மரம் நல்ல நிழல் தருவதால் வீட்டில் உபயோகிக்கும் காருக்கு

ஷெட் கூடக் கட்டவில்லை. மரங்களில் செழித்து குலுங்கி காய்கள் காட்சியளித்து நமக்கு பரவசத்தை உண்டாக்குகின்றது. சாதாரண சப்போட்டா காய்களை விட உருவத்தில் ஐந்து மடங்கு பெரியதாக உள்ளன. இந்த வீட்டு சிறியவர் மரத்தை வெட்டலாம் என்றார். பெரியவர் மரத்தை வெட்ட சம்மதிக்கவில்லை. புதிய வீட்டை சற்றே தள்ளி கட்டினாராம். இந்த மரத்தின் வயது 35 வருடங்கள். மரம் தொடர்ந்து பல வருடங்கள் வளர்ந்து வருகின்றது. சப்போட்டா மரம் வருடம் முழுவதும் காய்க்கின்றது. பீக் சீசன் என்று சொல்லப்படும் பிப்ரவரி - மார்ச் மாதங்களில் 300 காய்களையும், சீசன் சுமாராக இருக்கும். அக்டோபர் - நவம்பர் மாதங்களில் 200 காய்களையும் மகசூலாக தருகின்றது. விருப்ப முள்ளவர்கள் சப்போட்டாவை சாகுபடி செய்து பயன் அடையலாம். கன்றுகள் பெரியகுளத்தில் அமைந்துள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் கிடைக்கும். சிறந்த கன்றுகளை வாங்கி நடலாம். கன்று கிடைத்து நடும்போது ஒட்டு கட்டப்பட்ட பாகம் தரைக்கு மேல் இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். **சப்போட்டா ரகங்கள்:** சப்போட்டாவில் சுமார் 41 ரகங்கள் உள்ளன. முக்கியமான ரகம் ""களிபதி" பி.கே.எம். (பெரியகுளம்) ரகத்தை விட சிறந்தது. **சப்போட்டா ஒட்டுக் கன்றுகள்:** சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை 25 அடி இடைவெளியில் மழை சீசனில் நடலாம். சப்போட்டா சாகுபடி செய்ய விரும்புபவர்கள் தோட்டக்கலை நிபுணர்களை அணுகி அவர்களின் ஆலோசனையின்படி ஒட்டுக்கன்றுகளை வாங்கி நடலாம்.

விவசாயிகள் என்.ஆனந்த் (ஜி.நாகராஜ் நர்சரி கார்டன், 83 ரயில்வே ஸ்டேஷன் ரோடு, திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் - 635 601, கைப்பேசி எண் 94432 74796) அணுகி சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை வாங்கி வியாபார நினைப்போடு சாகுபடி செய்து நல்ல வருமானம் பெறலாம். ஒரு ஏக்கரில் 69 சப்போட்டா கன்றுகளை நடலாம். சப்போட்டா பழம் நன்கு வளர்ச்சி பெற பத்து மாதங்கள் ஆகின்றன. சப்போட்டா பழங்களில் இருந்து சப்போட்டா ஜூஸ் தயார் செய்யலாம். இதற்கு நல்ல வரவேற்பு மக்களிடம் உள்ளது. விவசாயிகள் நிபுணர் ஆனந்த் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனைகள் கேட்டு சப்போட்டா சாகுபடி செய்து பயன் அடையுங்கள்.

சப்போட்டாவின் அருமையை தெரியாதவர்கள் நெஞ்சில் ஈரம் இல்லாதவர்கள். கோடாளிகளை உபயோகித்து பசுமையான சப்போட்டா மரங்களை வெட்டித் தள்ளி வருகிறார்கள். விவசாயிகளுக்கு ஒரு அருமையான வாய்ப்பு. சுவையான

பழங்களை நமக்கு அள்ளித்தர இருக்கும். வெய்யிலின் கொடுமையை குறைத்து குளிர்ச்சியான சூழ்நிலையைக் கொடுக்கும். அமுதசுரபியான சப்போட்டாவை பாதுகாப்பது நமது விவசாயிகளது தலையாய கடமையாகும்.

**- எஸ்.எஸ்.நாகராஜன்.**

## நவீன தொழில்நுட்பம்

**துல்லிய பண்ணையத்தில் வாழை சாகுபடி**: துல்லிய பண்ணையத்திற்கு திசு வளர்ப்பு வாழையே சிறந்தது. திசு வளர்ப்பு கன்றுகளைத் தேர்வு செய்யும் போது கீழ்க்காணும் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும்.

* இரண்டு மாத வயதுள்ள 20-30 செ.மீ உயரமுள்ள கன்றுகளைத் தேர்வு செய்தல்.
* கன்றுகளில் 4-6 நன்கு வளர்ச்சியடைந்த இலைகள் இருக்க வேண்டும்.
* வைரஸ் நோய் தாக்கிய, மாறுபட்ட வளர்ச்சியுள்ள கன்றுகளை தேர்வு செய்யக்கூடாது.

திசு வளர்ப்புக் கன்றுகளை பயன்படுத்தாவிடில் பிற வாழைக்கன்றுகளை நேர்த்தி செய்யும் நுட்பங்கள்.

* நோய் தாக்காத 1.5 முதல் 2.0 கிலோ எடையுள்ள ஈட்டி வாழையிலிருந்து கன்றுகளைத் தேர்வு செய்ய வேண்டும். நடுமுன் கன்றின் வேர்களை சீவி விட வேண்டும்.
* இரஸ்தாளி, நெய்ப்பூவன் இரகங்களின் கட்டைகளை 0.1 சதம் கார்பண்டாசிம் கரைசலில் 5 நிமிடம் நனைக்க வேண்டும்.
* கன்றுகளை சேற்று கலவையில் கிழங்குகளை முக்கி கன்று ஒன்றுக்கு 40 கிராம் கார்போபியூரான் குருணை மருந்து தூவி நட வேண்டும்.

**நடவு:** வாழைக்கு 45X45X45 செ.மீ அளவுள்ள குழி எடுத்து, குழியின் மேல் மண்ணுடன் 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் வேப்பம்புண்ணாக்கு 50 கிராம் லிண்டேன் (1.3 சதம்) தூள் சேர்த்து நடவு செய்ய வேண்டும். அதிக பரப்பளவில் நடும்பொழுது நீள்வரிசையில் ஆழ உழுது தேவைப்படும் இடைவெளியில் கன்றுகளை நட வேண்டும்.

**அடர் நடவுமுறை:** வழக்கமான முறையில் 1.8 மீ X 1.8 மீ இடைவெளியில் வளர்க்கலாம். தற்போது அடர் நடவு முறை மூலம் உற்பத்தியை இருமடங்காக அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அடர் நடவு முறையில் ஒரு

குழிக்கு 3 கன்றுகள் வைத்து நடவு செய்யும் போது 1.8 X 3.6 மீ என்றளவில் ஒரு எக்டருக்கு 4600 கன்றுகள் நடலாம். இந்த முறையில் ரொபஸ்டா, கிராண்ட் நைன் இரகங்களைப் பயிரிட்டு பயன்பெறலாம். இதேபோல் நேந்திரன் இரகத்திற்கு 2X3 மீட்டர் என்றளவில் இடைவெளியில் ஒரு எக்டருக்கு 5000 கன்றுகள் நடவு செய்யலாம்.

**சொட்டுநீர் உரப்பாசனம்:** நீர்வழி உரமிடுவதன் மூலம், பரிந்துரைக்கப்பட்ட உர அளவை (110:35:330) ஒரு மரத்திற்கு கிராம் என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்றவாறு பிரித்து அளிக்க வேண்டும். சாதாரண நடவு முறையில் ஒரு வாழைக்கு தேவைப்படும் உர அளவு 110:35:330 கிராம் தழை, மணி, சாம்பல்சத்து என்றளவில் அடர் நடவு முறையில் 3 வாழைக்கு சேர்த்து 247.5:78.75:742.5 கிராம் அளவில் சத்துக்கள் போதுமானது.

**உயிரி உரம்:** ஒரு வாழைக்கு 20 கிராம் அசோஸ்பைரில்லம், 20 கிராம் பாஸ்போ பாக்டீரியா, உயிர் உரங்களை கன்று நடும்போதும், 5 மாதம் கழித்தும் இட வேண்டும்.

**ஊட்டச்சத்து மேலாண்மை:** துத்தநாக சல்பேட் 0.5 சதம், தாமிர சல்பேட் 0.2 சதம் போரிக் ஆசிட் 0.1 சதம், கலந்த கலவையைக் கன்றுகளில் தெளிக்க வேண்டும். நடவு செய்த 3, 5வது மாதத்தில் தெளிக்க வேண்டும்.

**வாழை குலைக்கு உறையிடுதல்:** வாழைகுலைதள்ளி கடைசி சீப்பு வெளிவந்தவுடன் 100 காஜ் தடிமன் கொண்ட ஒளி ஊடுருவும். நீளமான வெண்ணிற பாலிதீன் உறையை 4.0 சதவீதம் துளையிட்டு குலையை மறைத்து கட்டி விடலாம். சமீப காலங்களில் பாலிப்ரோபலீனால் செய்த வாழைகுலை பைகளும் சந்தையில் கிடைக்கின்றன.

**வளர்ச்சி ஊக்கிகள்:** கடைசி சீப்பு வெளிவந்தவுடனும் குலைதள்ளிய 20 நாட்களுக்குப் பிறகும் பொட்டாசியம் சல்பேட் உரத்தை லிட்டருக்கு 10 கிராம் அளவு கரைத்து தெளித்தால் குலைகளில் உள்ள காய்களின் தரம் நன்றாக இருக்கும். அல்லது சைக்கோசைல் (CCC) வளர்ச்சி ஊக்கியை லிட்டருக்கு 1 கிராம் அளவில் (அ) ப்ளாண்டோசைம் மருந்தை லிட்டருக்கு 2 மிலி என அளவு கரைசலை 6,8 வது மாதத்தில் தெளிக்கலாம்.

**பயிர் பாதுகாப்பு:** நூற்புழு, தண்டு கூண்வண்டு வேர் துளைக்கும் நூற்புழு, வேர் முடிச்சு நூற்புழு பனாமா வாடல் நோய், சிக்டோக்கா இலைப்புள்ளி நோய் ஆகியவற்றை பரிந்துரைக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி கட்டுப்படுத்த

வேண்டும். (தகவல்: முனைவர் க.சூரியநாத சுந்தரம், முனைவர் ஜே.அக்ஸிலியா, முனைவர் க.விநோத், பழவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப. கழகம், கோயம்புத்தூர்-641003. போன்: 0422 - 661 269.

**- டாக்டர் கு. சௌந்தரபாண்டியன்**

## ஒருங்கிணைந்த பண்ணைய முறையே வளங்குன்றா வேளாண்மைக்கு உதவும்

தோட்டக்கலைப்பயிர் சாகுபடியுடன் ஒருங்கிணைந்த பண்ணைய உத்தி தான் லாபம் தரும். இதற்கு தோட்டக்கலைப்பயிர் சாகுபடியுடன் உப தொழில்களாக மண்புழு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, ஆடு, மாடு, முயல், பன்றி, பட்டுப்புழு, வாத்து, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, வேளாண் காடுகள், சாண எரிவாயு கலன், சூரிய ஒளி ஆதாரங்கள் பயன்பாடு மூலம் காயவைத்து விற்க உகந்த வற்றல் வகைகள் வடாம் தயாரிப்பு மற்றும் பழங்கள் மூலம் பழச்சாறு, கனிரசம், ஜாம் தயாரிப்பு, ஜெல்லி தயாரிப்பு, பண்ணைக் குட்டைகள் அமைத்தல் தீவனப்பயிர் சாகுபடி செய்தல் முதலிய ஒருங்கிணைந்த பண்ணைய உத்திகளையும் மேற்கொள்ள நிறைய வாய்ப்பு இருந்தும் ஒரு பயிர் சாகுபடி, முறையற்ற வேளாண்மை, நீர் பற்றாக்குறை பற்றி பேசி அதிக நீர்த்தேவைப்படும் உயர் விளைச்சல் தான்யப் பயிர் தேர்வு செய்து நட்டு மகசூல் இழப்பால் அவதிப்படாமல் இருக்க நிச்சயம் "வளங்குன்றா வேளாண்மை' உத்தியைக் கையாளலாம்.

இயற்கை வேளாண்மை உத்தியும் இத்தகைய உத்திகளால் எளிதில் சாத்தியாகும் அங்ககச்சான்று மூலம் உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் சான்று பெறலாம். இதன் மூலம் இயற்கை அங்காடிகளில் தனது விளை பொருட்களை விற்க வழி உள்ளது. ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் பாரம்பரிய முறைகளையும் நவீன உத்திகளையும் வேளாண், தோட்டக்கலை சார்பு தொழில்களை ஊக்குவிக்கும் உத்தியாகும். ஒவ்வொரு விவசாயியும் தனது நிலப்பரப்பினை இறைவன் கொடுத்த சூரிய ஒளி அறுவடை தொழிற்சாலை என கருதி நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி இதில் ஒருங்கிணைந்த முறைகள் கையாள இன்று அவசியம் வந்துள்ளது. இத்தகைய உத்திகளால் தான் உயர் லாபம் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு, நிலையான வருமானம், நீடித்த வேளாண்மை பண்ணைக்கழிவுகள் முறையாக பயன்படுதல், தரமான விளைபொருள் தன் முயற்சி

மூலம் உற்பத்தி செய்து அங்ககச் சான்று மூலம் நலமான சூழல் ஏற்படுத்தி நோயில்லா பெருவாழ்வு வாழ சமுதாயத்துக்கு உதவலாம். எனவே இன்றே திட்டமிட்டு செயல்படலாம் என டாக்டர் பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலை தெரிவித்தார். இவரது ஆலோசனைக்கு 98420 07125.

### வங்கக்கடலில் காற்றழுத்தம்:தமிழகத்தில் மழை வாய்ப்பு

**சென்னை**:தென் மேற்கு வங்கக்கடலில், இலங்கை அருகில் நிலை கொண்டுள்ள, காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களில், மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.சென்னை உட்பட, தமிழகம் முழுவதும், கடந்த சில தினங்களாக, பகல் வேளையில், வெயில் வாட்டி வருகிறது. இரவில் பனியும், அதிகாலையில் பனி மூட்டமும் நிலவுகிறது. இரவில் பனி இருந்தாலும், பகல் வேளையில் கொளுத்தும் வெயிலால், பொதுமக்கள், பெரிதும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.இந்நிலையில், தென் கிழக்கு வங்கக்கடலில், நேற்று முன்தினம், அந்தமான் அருகில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி, அங்கிருந்து நகர்ந்து, தற்போது, தென்மேற்கு வங்கக்கடலில், இலங்கைக்கு அருகில் நிலை கொண்டுள்ளது.'காற்றழுத்த தாழ்வு நிலை, அடுத்த, 48 மணி நேரத்தில், மேற்கு நோக்கி நகரும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக, அடுத்த மூன்று நாட்களுக்கு, தென் தமிழகத்தின் சில பகுதிகள், கடலோர பகுதிகளில் ஆங்காங்கே மழைக்கு வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.வடதமிழகத்தில் வறண்ட வானிலையே நிலவும் என்றும், வானிலை ஆய்வு மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

### குறையுது பெரியாறு

**கூடலூர்**:பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழையின்றி, அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கடந்த சில தினங்களாக, அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழையின்றி, அணையின் நீர்மட்டம் குறையத் துவங்கியுள்ளது. சில தினங்களுக்கு முன், அவ்வப்போது பெய்த மழையால், 110 அடி வரை குறைந்த நீர்மட்டம் படிப்படியாக 111.20 அடி வரை உயர்ந்தது. மீண்டும் மழை குறைந்து நீர்மட்டம்

நேற்று காலை, 110.60 அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 100 கன அடி நீர், இறைச்சல் பாலம் வழியாக திறக்கப்பட்டுஉள்ளது. நீர் இருப்பு 1006 மில்லியன் கன அடி.

## மா மரத்தில் பூக்கள் அதிகரிப்பு

**அவலூர்பேட்டை**: மாமரங்களில் பெரும்பாலான இடங்களில் பூக்கள் அதிகளவில் பூத்து குலுங்குகின்றன. இதனால் மகசூல் அதிகரிக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர்.மேல்மலையனூர் ஒன்றியத்தில் பல பகுதிகளில் மாமரங்கள் உள்ளன. தற்போது மழை பொய்த்து போனது. மேலும் அதிகளவில் காற்றின் தாக்கம் ஏற்படவில்லை. பனிப்பொழிவினை தாக்குப்பிடித்த மா மர ங்களில் சில தினங்களாக பூக்கள் அதிகளவில் பூத்து குலுங்குகின்றன. கடந்தாண்டு மாங்காய், புளி உள்ளிட்டவை மகசூல் குறைந்திருந்தது. இந்த வகையான மரங்கள் பருவம் விட்டு பருவம் என்பதை போல் ஒரு ஆண்டிற்கு மகசூல் நன்றாக இருந்தால் அடுத்தாண்டு குறைவது வழக்கம்.அதற்கேற்றார் போல் புளியமரங்களிலும் அதிகளவில் காய்களும், மா மரங்களில் பூக்களும் பூத்துள்ளன. இந்த வகையான புளிப்பு காய்கள் அதிகரித்தாலும், வேப்ப மரம் காய்ந்தாலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்சம் ஏற்படும் என மூத்த குடிமக்கள் கூறுகின்றனர்.

## மயிலம் பகுதியில் சாமந்தி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்

**மயிலம்**: மயிலம் பகுதி விவசாயிகள் சாமந்தி பூ சாகுபடி செய்ய மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர். மயிலம் ஒன்றியம் விளங்கம்பாடி, தழுதாளி, மயிலம், முப்புளி, செண்டூர், வீடூர், கொணமங்கலம், வெளியனூர், தென் கொளப்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் பூ சாகுபடி செய்ய ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மலர் சாகுபடிக்கு அதிக தணணீர் தேவையில்லை. கிணற்றில் தற்போதுள்ள குறைந்த நீரை கொண்டு பயிரிடலாம். சாமந்தி பூச்செடிகளை அதிக பூச்சிகள் தாக்குவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு செலவு குறைகிறது. சாமந்தி பூக்களுக்கான வீரிய விதைகள் விழுப்புரத்தில் தனியார் விதை விற்பனை கடைகளில் கிடைக்கிறது. இவற்றை விவசாயிகள் வாங்கி வருகின்றனர். நிலத்தை

நன்றாக உழவு செய்து பாத்திகள் கட்டி செடிகளை நடவு செய்கின்றனர். செடிகள் நடவு செய்த 22 நாட்களில் பூக்க ஆரம்பிக்கிறது. விவசாயிகள் சாமந்திப் பூவை திண்டிவனம் பூச்சந்தையில் விற்கின்றனர். நல்ல சீசன் நேரத்தில் கிலோ 60 ரூபாய் வரை விற்கிறது. தற்போது நல்ல ரகமான பூ கிலோ 20 ரூபாய் முதல் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். சாமந்தி பூவில் மாலைகள் கட்டியும், காதம்பமாக கட்டியும் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். மார்க்கெட்டில் இந்த பூவிற்கு திருவிழாக் காலங்களிலும், சுப முகூர்த்த தினத்திலும் நல்ல கிராக்கி உள்ளது. மயிலம் பகுதி விவசாயிகள் சாமந்தி பூ பயிரிட மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். தோட்டக் கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில் நுட்பங்கள், பயிர்பாதுகாப்பு முறைகள், சொட்டுநீர் பாசனம், மலர் விதைகள், சந்தை வசதிகளை அதிகப்படுத்தினால் விவசாயிகள் மேலும் அதிக அளவில் பயிரிட முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## மக்காசோளம் வரத்து குறைவு

**சின்னசேலம்**: சின்னசேலம் மார்க்கட்டில் மக்காசோளம் வரத்து குறைந்தது.சின்னசேலம் மார்க்கட் கமிட்டிக்கு நேற்று முன் தினம் 150 மூட்டை மக்காச்சோளம் வந்தது. அதிகபட்ச விலை 1, 272 ரூபாய் ஆகும். குறைந்தபட்ச விலை 1, 249 ரூபாய் ஆகும். சென்ற வாரம் 1200 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூபாய் 14 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஆகும்.

## கோடை துவங்கியதால் பழ விற்பனை அதிகரிப்பு

**ஈரோடு**: தமிழகத்துக்கு, காஷ்மீர், இமாச்சல பிரதேசம், பெங்களூரில் இருந்து ஆப்பிள் பழங்கள், மத்திய பிரதேசம், நாக்பூர் பகுதிகளில் இருந்து மாதுளை, ஆரஞ்சு பழங்களும், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரியில் இருந்து மாம்பழம், சப்போட்டா பழங்கள் வரத்தாகின்றன.

ஈரோடு மார்க்கெட்டுக்கு, தினமும், 80 டன் பழங்கள், கடப்பாவில் இருந்து, சாத்துக்குடி, விளாம்பழம், முலாம்பழம், தமிழகத்தின் கம்பம், போடி, குமுளி, தேனி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும், கருப்பு, வெள்ளை திராட்சை, கேரளா, பண்ருட்டியில் இருந்து பலாப்பழம், திண்டுக்கல்லில் இருந்து சப்போட்டாவும்

வருகிறது. நேதாஜி காய்கறி மார்க்கெட் பின்புறம், மொத்த விற்பனை செய்யும் பழ மண்டிகள் அமைந்துள்ளது. உழவர் சந்தைகள், காய்கறி மார்க்கெட், பழமுதிர் நிலையங்கள், ஜூஸ் கடைகளிலும் விற்பனை செய்கின்றனர்.

இதுகுறித்து ஈரோடு, கனி வியாபாரிகள் சங்க பொறுப்பாளர், ராமச்சந்திரன் கூறியதாவது:

மொத்த விலையில், நல்ல தரம் வாய்ந்த காஷ்மீர் ஆப்பிள் கிலோ, 120க்கும், 14 கிலோ உடைய பெட்டி, 1,600 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. பொதுவாக காம்பு இல்லாத மிருதுவான ஆப்பிள் பழங்களே ஒரிஜனலானவை. வெள்ளை நிறத்தில் உள்ள ஆப்பிள் பழங்களில், ருசி குறைவாக இருக்கும். வெளிநாட்டு ஆப்பிள், 18 கிலோ, 3,200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆப்பிள் விலை, இந்த வாரம் கிலோவுக்கு, பத்து ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

அதேபோன்று, நாக்பூர் ஆரஞ்சும், 40, 45, 50 ரூபாய் விலையில் ரகத்தை பொருத்து விற்கப்படுகிறது. மாதுளை, திராட்சை, சாத்துக்குடி பழங்களின் விலையில் மாற்றமில்லை. கோடை காலம் துவங்கி விட்டதால், வரத்து குறைந்து, பழங்களின் விலை அதிகரிக்கூடும். அடுத்த ஆறு மாதத்துக்கு விற்பனை நன்றாக இருக்கும், என்றார்.

## வாய் கோமாரி தடுப்பூசி தீவிரம் வாய்ப்பை பயன்படுத்த அழைப்பு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 17 நாளில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், மொத்தம், 2.80 லட்சம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கறவை மாடுகளுக்கு, கோமாரி நோய் தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், ஆண்டுதோறும், மார்ச் ஒன்று முதல், 21ம் தேதி வரை ஒரு முறையும், செப்., 15 முதல் அக்., ஆறாம் தேதி வரையும், தலா, 21 நாட்கள், நோய் தாக்கம் அதிகமுள்ள கிராமங்களை தேர்ந்தெடுத்து, கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.

அதன்படி, நடப்பாண்டு, முதல் பருவத்துக்காக, 3.70 லட்சம் தடுப்பூசிகள், ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையால் பெறப்பட்டது. அந்த தடுப்பூசிகள், கடந்த, ஒன்றாம் தேதி முதல், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 14 யூனியனிலும், போடப்பட்டு வருகிறது. இத்தடுப்பூசி போட, உதவி மருத்துவர்கள் தலைமையில்,

132 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 2,206 கிராமங்களுக்கு சென்று தடுப்பூசி போடும் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தினமும், 17 ஆயிரத்து, 445 தடுப்பூசி போட வேண்டும், என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தடுப்பூசி முகாம் துவங்கி, கடந்த, 17 நாளில், இதுவரையில், 3.81 லட்சம் கால்நடை இனங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதம், 90 ஆயிரம் தடுப்பூசிகள் மட்டுமே உள்ளது.

தடுப்பூசி முகாம், 18 முதல், 20ம் தேதி வரை, தாளவாடி யூனியன் மற்றும் கடம்பூர் பகுதிக்கு உட்பட்ட பகுதியில் முகாம் நடக்கிறது. 21ம் தேதி அந்தியூர் யூனியனுக்கு உட்பட்ட பர்கூரில் நடக்கிறது. கோமாரி நோய் தடுப்பூசி போடாத கால்நடைகளுக்கு, மருத்துவ குழுவினர் துருவி ஆராய்ந்து, கிராமங்கள் வாரியாக சென்று தடுப்பூசி போட்டு வருகின்றனர்.

இன்னும் தடுப்பூசி போடாத பயனாளிகள், இந்த வாய்ப்பை நழுவவிடாமல், பயன்படுத்திக்கொள்ள கால்நடைத்துறை கேட்டுக்கொண்டனர்.

## மனித-விலங்கு மோதலை தடுக்க புதிய இசை கருவி; விவசாய தோட்டத்தில் "தலைகாட்டாத' வன உயிரினங்கள்

**பந்தலூர்** : தோட்டத்தில் நுழையும் விலங்குகளால் ஏற்படும் பிரச்னைகளை தீர்க்க, பந்தலூர் பகுதியை சேர்ந்த வாய்பேச முடியாத ஒருவர் உருவாக்கிய புதிய இசை கருவி, விவசாயிகள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே சேரங்கோடு டான்டீ பகுதியை சேர்ந்தவர் பேரின்பநாதன்,40. வாய் பேச முடியாத இவர், டான்டீயில் சாதாரண தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். ஓய்வு நேரத்தை வீணடிக்காமல் வீட்டிற்கு அருகே உள்ள தோட்டத்தில் மலை காய்கறிகளை விளைவித்து வருகிறார். காய்கறி தோட்டத்தில் உள்ள பீன்ஸ், வெண்டை, கத்தரி போன்றவற்றின் பூக்களை பறவைகளும், பிற காய்கறிகளை முயல், குரைக்கும் மான், கடமான் உள்ளிட்ட வனவிலங்குகளும் உண்டும், சேதப்படுத்தியும் வருகின்றன. இதனை தடுக்க பல முயற்சிகளை மேற்கொண்டும் பயனளிக்கவில்லை. இதனை தொடர்ந்து, பேரின்பநாதன், சப்தம் எழுப்பும் ஒரு புதிய இசை கருவியை உருவாக்கி, வன உயிரினங்கள் தோட்டத்தில் நுழைவதை கட்டுப்படுத்தி வருகிறார்.புதிய

முயற்சிஇவரின் தோட்டத்தில் உள்ள கால்வாயில், ஒரே சீராக தண்ணீர் விழும் வகையில் பாத்தி அமைத்துள்ளார். அதன்கீழ் தகரடப்பாவை காற்றாடி போல் உருவாக்கி, அதிலிருந்து ஒரு கம்பியை இணைத்து, அதன் மறுபக்கத்தை குச்சியில் கட்டியுள்ளார். அதனருகே கண்ணாடி பாட்டில்கள், அலுமினிய தட்டுக்களை இணைத்துள்ளார்.காற்றாடிபோல் உள்ள டப்பாவில் தண்ணீர் விழும்போது, அது சுழல்கிறது. அதில், இணைக்கப்பட்டுள்ள கம்பி, அதன் மறுபக்கத்தில் உள்ள பாட்டில், அலுமினிய தட்டுகளின் இணைப்பை இழுத்து விடுகிறது. இதனால், எழும் புதிய இசையுடன் கூடிய சப்தம் பறவைகள், வனவிலங்குகளை மட்டுமல்ல, புதிதாக இப்பகுதிக்கு செல்லும் மனிதர்களையும் ஒரு நிமிடம் திகைக்க செய்கிறது. இரவு நேரத்தில், இந்த சப்தத்தை கேட்டு யானைகள் கூட, இந்த பக்கம் வருவதில்லை. தண்ணீர் நின்றுபோனால் மட்டுமே சப்தம் நின்று விடுகிறது.வன உயிரினங்களை எந்த விதத்திலும் துன்புறுத்தாமலும், தோட்டத்தை பாதுகாப்பதிலும், பேரின்பநாதன் எடுத்துள்ள இந்த புதிய முயற்சி, சுற்றுப்புற விவசாயிகளை ஆச்சரியத்தில் ஆழ்ந்து உள்ளது. இதனை பார்த்த விவசாயிகள் சிலர் கூறுகையில்,"இதேபோன்று, பிற பகுதிகளிலும் இந்த சாதனங்களை சற்று நவீன படுத்தி பொருத்தினால், விலங்கு-மனித மோதல்களை பெரும்பாலும் தவிர்க்க முடியும்' என்றனர்.

## ஒட்டன்சத்திரத்தில் முருங்கை விலை வீழ்ச்சி

**ஒட்டன்சத்திரம்** : வரத்து அதிகமாக உள்ளதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கை விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ரூ.4 க்கு விற்றது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் மரம், செடி, கரும்பு ரக முருங்கைக்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவற்றில் கரும்பு ரக முருங்கை ருசியில் முதலிடத்திலும், செடி முருங்கை 2 ம் இடத்திலும், மரம் முருங்கை 3ம் இடத்திலும் உள்ளன. கடந்த சில மாதங்களாக மரம் முருங்கை வரத்து மிகவும் குறைந்த அளவே காணப்பட்டது. ஒட்டன்சத்திரம், மார்க்கம்பட்டி, மூலனூர், கள்ளிமந்தையம் பகுதிகளில் முருங்கை அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மரம் முருங்கை விளைச்சல் நன்றாக உள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு வரத்து நாளுக்கு நாள் வரத்து அதிகரித்து வருகிறது. தேவைக்கு அதிகமாக வரத்து இருப்பதால் அவை அட்டைப் பெட்டிகளில் அடைக்கப்பட்டு மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு

அனுப்பப்படுகிறது. நேற்று மரம் முருங்கை கிலோ ரூ.4 க்கும், செடி மற்றும் கரும்பு முருங்கை தலா ரூ.7க்கும் விற்றன. நேற்று முன்தினம் மரம் முருங்கை ரூ.3.50 க்கு விற்றது. வரத்து அதிகமாக இருப்பதால் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## கோமாரி நோய் தடுப்பு முகாம்

**சிங்கம்புணரி** : சிங்கம்புணரி வட்டார கிராமங்களில் கோமாரி நோய் தடுப்பு முகாம் நடந்தது. அ.காளாப்பூர், சிவபுரிப்பட்டி, அணைக்கரைப்பட்டி, மதுராபுரி கல்லபட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் கால்நடைகளை சில மாதங்களுக்கு முன் கோமாரி தாக்கியது.சிங்கம்புணரி கால் நடை மருத்துவர் தமிழரசி தலைமையில் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டனர். 3 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதாக தெரிவிக்கபட்டது.

## குமரியில் இளநீர் விலை அதிகரிப்பு

**நாகர்கோவில்** : குமரியில் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போனதால் நீர் நிலைகளில் போதுமான தண்ணீர் இல்லை.

பச்சைப்பசேலென காணப்பட்ட வயல்வெளிகளும் வீட்டு மனைகளாக மாறிவிட்டதால் குளுகுளுவென காணப்பட்ட குமரியில் கடுமையான வெப்பம் நிலவுகிறது. இந்நிலையில் கோடையில் தாகம் தணிக்கும் அனைத்து பொருட்களும் கடுமையான விலை ஏறிப்போயுள்ளன. ரூ.15-க்கு விற்பனையான இளநீர் தற்போது ரூ.20-க்கும், 25-க்கும் விற்பனைசெய்யப்படுகிறது. எலுமிச்சை சர்பத் குறைந்த பட்சம் ரூ.10-க்கும் கடைகளை பொறுத்து 15-க்கும் விற்பனைசெய்யப்படுகிறது. உயர் ரக தர்பூசணி கிலோ ரூ.20-க்கும் விற்பனையாகிறது. இதேபோல் நுங்கு சர்பத் மற்றும் அன்னாசி பழ சர்பத் போன்றவையின் விற்பனையும் சூடுபிடித்துள்ளது.

பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களில் 200 மில்லி பதநீர் ரூ.15-க்கு விற்பனை ஆகிறது. முன்பு மாலை வரை கிடைக்கும் பதநீர் கோடை காரணமாக மதியத்திற்குள் விற்று தீர்ந்து விடுகிறது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மல்லிகை பூ விலை கடும் வீழ்ச்சி



**நெல்லை:** நெல்லையில் விழா காலங்களில் கிலோ ரூ.1000க்கு விற்கப்ப டும் மல்லிகை பூவின் விலை நேற்று கிலோ ரூ.100 ஆக குறைந்தது. நெல்லை பூ மார்க்கெட்டுக்கு தற்போது சங்கரன்கோவில் பகுதியில் இருந்து மல்லிகை பூ அதிகம் வருவதால் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சம்பங்கி ரூ.200, கனகாம்பரம் ரூ.600, பிச்சி ரூ.1000, அரளி ரூ.80க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பிச்சி பூ விளைச்சல் இல்லாததால் ரூ.1000க்கு விற்கப்படுகிறது. மல்லிகை விலை வீழ்ச்சிக்கான காரணம் குறித்து வியாபாரிகள் கூறுகையில், ''நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களை பொறுத்தவரை பங்குனி உத்திரம் மாத துவக்கத்திலேயே வந்தால் மட்டுமே பூக்களின் விலை உயரும்.

இந்த ஆண்டு பங்குனி உத்திரம் மாத கடைசியில் வருகிறது. இதனால் உத்திரம் முடிந்த பின்னரே கோயில் கொடை விழாக்கள், முகூர்த்தம் ஆகியவற்றுக்கு நாள்குறிப்பது வழக்கம்.

இவ்வாண்டு உத்திர திருவிழா மாதக்கடைசியில் வருவதால், பூக்களின் தேவை குறைந்து விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்றனர்.

**சின்னவெங்காயம் விலை உயர்வு**



**சேலம்**: சேலம் மார்க்கெட்டிற்கு ராசிபுரம், முத்துநாயக்கன்பட்டி, நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர், பாப்பம்பட்டி, காடையாம்பட்டி உள்ளிட்ட இடங்களில் இருந்து சின்ன வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்கள் சின்ன வெங்காய சீசனாகும்.

சேலம் மார்க்கெட்டிற்கு சனி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் சின்ன வெங்காயம் மூட்டை மூட்டையாக விற்பனைக்கு வருகிறது.

கடந்த மாதத்தில் பனிப்பொழிவால் விளைச்சல் அதிகரித்து வாரத்திற்கு 50 கிலோ கொண்ட 4000 மூட்டைகள் வரை விற்பனைக்கு வந்தது. வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.18 வரை விற்பனையானது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரத்தில் வரத்து குறைவால் சின்ன வெங்காயம் விலை கிலோவிற்கு ரூ.4 வரை அதிகரித்துள்ளது.

தற்போது ஒரு கிலோ சின்ன வெங்காயம் கிலோ ரூ.22 முதல் ரூ.24 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'வாரத்திற்கு 4000 மூட்டைகள் வீதம் வரத்து வந்து கொண்டிருந்த நிலையில், தற்போது 2000 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வருகிறது.

இதனால் சின்ன வெங்காயம் விலை அதிகரித்துள்ளது' என்றனர்.

**ரூ.6 கோடிக்கு பருத்தி விற்பனை**



**ஆத்தூர்:** ஆத்தூர் புதுப்பேட்டை பகுதியில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இங்கு நடந்த ஏலத்தில் விவசாயிகளால் கொண்டு வரப்பட்ட 27 ஆயிரம் மூட்டைகள் ரூ.6 கோடிக்கு விற்பனையானது. இதில் ஆர்சிஎச் ரகம் குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 9 முதல் ரூ.5 ஆயிரத்து 69 வரையும், டீசிஎச் ரகம் ரூ.6 ஆயிரத்து 9 முதல் ரூ.7 ஆயிரத்து 59 வரையும் விற்பனையானது. கடந்த வாரம் ஏலம் நடைபெறாததால், இந்த வாரம் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் மற்ற பகுதியை விட பருத்தி விலை குவிண்டாலுக்கு ரூ.200 முதல் ரூ.300 வரை கூடுதலாக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**பாசன வாய்க்காலில் தண்ணீர் திடீர் திறப்பால் உளுந்து சாகுபடி பாதிப்பு**

**காட்டுமன்னார்கோவில்**, : காட்டுமன்னார்கோவில் அருகே உள்ளது குப்பங்குழி. இங்கு பெரும்பாலானோர் விவசாயிகள். வடவாற்றிலிருந்து பிரியும் கிளை வாய்க்கால் மூலம் பாசனம் பெற்று விவசாய பணிகள் நடைபெறுகிறது. நெல் அறுவடைக்கு பிறகு வயல்களில் உளுந்து விதைத்து இதன் மூலம் வரும் வருமானத்தை கொண்டே நெல் சாகுபடியில் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வர். இதன் காரணமாக உளுந்து சாகுபடிக்கு பெரிதும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வடவாற்றில் தற்போது தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. வீராணம் ஏரியில் தண்ணீர் உள்ளதால் ஏரியின் ஷட்டர் மூடப்பட்டுள்ளது. இதனால் வடவாற்றில் தேங்கிய நிலையில் தண்ணீர் காணப்பட்டது. சிலர் பூவிழந்தநல்லூர் அருகே உள்ள பழைய வடவாற்றில் உள்ள ஷட்டரை

திறந்துள்ளனர். இந்த தண்ணீர் குப்பங்குழிக்கு செல்லும் வாய்க்கால் வழியாக சென்றது. வாய்க்காலில் சென்ற தண்ணீர் உளுந்து வயல்களில் தேங்கியது. அறுவடைக்கு சில நாட்கள் உள்ள நிலையில் தண்ணீர் சென்றதால் உளுந்து சேதமடைந்தது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வடவாற்றில் தேங்கிய தண்ணீரை திடீரென திறந்துவிட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தனர்.

**கோமாரி தடுப்பூசி முகாமை உதவி இயக்குனர் நேரில் ஆய்வு**

**தர்மபுரி,** : தர்மபுரி மாவட்டத்தில் நடந்து வரும் கால்நடை சிறப்பு முகாமில் கடந்த 17 நாட்களில் 2.76 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தடுப்பூசி போடும் பணியை சென்னை தலைமை கால்நடை பராமரிப்புத் துறை அலுவலக உதவி இயக்குனர் சுரேஷ் திடீர் ஆய்வு செய்தார். தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 1ம் தேதி முதல், கோமாரி நோய் தடுப்பூசி கால்நடை சிறப்பு முகாம் நடந்து வருகிறது. புழுதிகரை, ஜருகு, தடங்கம், நாகர்கூடல், பெலாரஅள்ளி, பாடி, பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, தம்மணம்பட்டி உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் கடந்த 17 நாட்களில் நடந்த சிறப்பு முகாமில் 2.76 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

சென்னை தலைமை கால்நடை பராமரிப்புத் துறை அலுவலக உதவி இயக்குனர் சுரேஷ் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிகளை திடீரென ஆய்வு செய்தார். தர்மபுரி பாடி, பாப்பாரப்பட்டி, பாலக் கோடு, தம்மணம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நடந்த முகாமில் தடுப்பூசி போடும் பணிகளை ஆய்வு செய்தார். ஆய்வின்போது, தர்மபுரி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர்கள் இளங்கோ, ஜெகநாதன், ராதாகிருஷ்ணன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் உடனிருந்தனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: “கோமாரி தடுப்பூசி குளிர்பதன கிடங்கில் வைத்து சரியான முறையில் பராமரித்து கால்நடைகளுக்கு போடப்படுகிறதா, முகாமிற்கு வரும் கால்நடை உரிமையாளர்கள் அடையாள அட்டை வைத்துள்ளார்களா என்றும் சென்னை தலைமை கால்நடை பராமரிப்புத் துறை அலுவலக உதவி இயக்குனர் சுரேஷ் ஆய்வு செய்தார்,“ இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

அரூர் : அரூர் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவ முகாம் நேற்று நடந்தது. இதில் 3 ஆயிரம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. அரூர் ஒன்றியம் செல்லம்பட்டி, கீழானூர், தீர்த்தமலை, கொத்தனாம்பட்டி, பொய்யப்பட்டி, 4வது மைல், வாலெடுப்பு ஆகிய கிராமங்களில் கோமாரி விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு கால்நடை உதவி மருத்துவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். தொண்டு நிறுவன இயக்குநர் ஈஸ்வரன், கால்நடை உதவி மருத்துவர் அறிவுசெல்வன் ஆகியோர் பேசினர். டாக்டர் விஜயவிஷ்ணு முன்னிலை வகித்தார். முகாமில் கால்நடைகளை நோய் தாக்காமல் பராமரிக்கும் முறைகள், வருடத்திற்கு இரண்டு முறை கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுவதன் அவசியம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இம்முகாமின் மூலம் 3000 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதில் கால்நடை ஆய்வாளர், நடமாடும் மருத்துவ குழுவினர் கலந்து கொண்டனர்.

## கால்நடைகள் திறன்மேம்பட புதிய தொழில் நுட்பம் ஆராய்ச்சி மையம் அறிவிப்பு

**கரூர்,** : கால்நடைகளின் திறன்மேம்பட புதிய தொழில்நுட்பங்களை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், பண்ணையாளர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை பண்ணையாளர்களுக்கு பயன்படும் பல புதிய தொழில்நுட்பங்களை வெளியிட்டுள்ளது. அதில், தானுவாஸ் கிராண்ட் ஊட்டசத்து- நுண்ணுயிர்களுக்கு தேவைப்படும் சத்துக்களான நைட்ரஜன், கந்தகம், கோபால்ட், தாமிரம் போன்றவற்றை கொண்டது. இம்மருந்தை மாடுகளின் தீவனத்தில் அளிப்பதால் மாடுகளுக்கு நுண்ணுயிரிகள் அதிகரிக்கின்றன. தீவனத்தின் செரிமானம், அதிகரிப்பதுடன் அதிக நுண்ணுயிரிகள் வயிற்றின் பின்புற குடல் பகுதிக்கு சென்று அவையும் செரிக்கப்படுவதால் மாட்டின் பால்உற்பத்தி பெருகுவதற்கு வழிவகை செய்கிறது. தானுவாஸ் கிராண்ட் ஊட்டசத்து மருந்து கரைசலாக (டானிக்) பாலித்தீன் பைகளில் 10மிலி அளவு அடைக்கப்பட்டு ஒருவேளைக்கு அளிப்பதற்காக கிடைக்கிறது.

ஸ்மார்ட் தாதுஉப்பு கலவை: தேவைப்படும் தனிமங்களை மட்டும் மாடுகளில் குறைபாடு ஏற்படும் பகுதிகளில் தீவனத்தில் கலந்து அளிப்பது நல்லது. இதற்காக ஸ்மார்ட் தாதுஉப்பு கலவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### பண்டுதகாரன்புதூரில் பரண்மேல் ஆடுவளர்ப்பு பயிற்சி

**கரூர்**, : கரூர் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் கரூர் வட்டார ஆத்மா திட்டத்தின்கீழ், பரண்மேல் ஆடுவளர்ப்பு குறித்த ஒருநாள் வளாக பயிற்சி வரும் 25ம்தேதி (செவ்வாய்) நடைபெற உள்ளது.

பயிற்சியில் ஆடுகளுக்கு பரண் முறையில் கொட்டகை அமைப்பு, ஆடுகளை தேர்வு செய்தல், தீவன பராமரிப்பு, நோய்தடுப்பு முறைகள், இதர பராமரிப்பு முறைகள், பொருளாதாரம் மற்றும் பரண்மேல் ஆடுவளர்ப்பில் உள சாதக பாதகங்கள் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதில் கலந்துகொள்வோர் காலை 10மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வந்துவிடுமாறும், மதியஉணவு, பயிற்சிக்கான பொருட்கள் வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் தொலைபேசி எண் 04324-294335 தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளுமாறு மையத்தின் இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அகிலா கேட்டுக்கொண்டுள்ளார்.

### காலாவதியான விதைகள் விற்றால் கடும் நடவடிக்கை வேளாண் துறை இயக்குநர் எச்சரிக்கை

**தஞ்சை,**: காலாவதியான விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதைச் சான்று இணை இயக்குனர் கோவிந்தராஜன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு விதைப் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் விதைச் சான்று இணை இயக்குனர் கோவிந்தராஜன் ஆய்வு செய்தார். தஞ்சை மாவட்டம் கும்பகோணம் பகுதியில் உள்ள அரசு

விதைப்பண்ணை மற்றும் விதைச்சுத்திகரிப்பு நிலையங்களில் விதைச்சான்று இணை இயக்குனர் கோவிந்தராஜன் நேற்று ஆய்வு செய்தார். விதைச்சுத்திகரிப்பு செய்யும் முறை, சான்றுஅட்டை பொருத்தும் முறை ஆகியவற்றை ஆய்வு செய்தார். தஞ்சை மாவட்டத்தில் விதை இருப்பு, விதைப்பரிசோதனை கூடப் பணிகள், விதை விநியோகம் செய்யும் விதை விற்பனை மையங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார். காலாவதியான விதைகள் விற்பனை செய்தாலோ, உரிமம் இன்றி விதை விற்பனை செய்தாலோ விதைச் சட்டம் 1966ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். ஆய்வின் போது விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன், விதைச் சான்று உதவி இயக்குனர் மணிமாறன், கும்பகோணம் வேளாண் உதவி இயக்குனர் லட்சுமிகாந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்**

**மன்னார்குடி**, : மன்னார்குடி மிட்டவுன் ரோட்டரி சங்கம், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தளிக்கோட்டை, முக்குளம் சாத்தனூர், நல்லிக்கோட்டை, அத்திக்கோட்டை ஆகிய கிராமங்களில் கோமாரி தடுப்பூசி, விழிப்புணர்வு முகாம் நடந்தது.

ரோட்டரி மாவட்ட கால்நடை மருத்துவ திட்டங்கள் தலைவர் டாக்டர் பாலகிருஷ்ணன், உதவி இயக்குனர் டாக்டர் லூர்துசாமி, துணை இயக்குனர் டாக்டர் தமிழ்ச்செல்வன், உதவி மருத்துவர் ஜெயபால், மகேந்திரன், கோவிந்தராஜ், சிவபிரகாசம், பிரேம்குமார், ராஜேஷ், கால்நடை ஆய்வாளர் லட்சுமி, குருநாதன், செங்குட்டுவன், மாலதி, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் வீரமணி, சதாசிவம், கருணாநிதி, மோகன், பாபு, கீதா, லட்சமி, குமுதவல்லி ஆகியோர் முகாமை நடத்தினர். 2,234 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

பூம்புகார்: ராதாநல்லூர் ஊராட்சியில் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் மற்றும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் சரஸ்வதி தலைமை வகித்தார். ஊராட்சி துணைத்தலைவர் ரமேஷ் முன்னிலை வகித்தார். 500 க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஊராட்சி செயலர் எம்பாவை கண்ணன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி**

**விளாத்திகுளம்,:** விளாத்திகுளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்திராணி அறிவுறுத்தலின் பேரில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் ஆர்வலர் குழுக்களுக்கான திறன்வளர்த்தல் பயிற்சி முகாம் அருங்குளம் கிராமம் மற்றும் விளாத்திகுளம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடந்தது. மண்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் செல்வம் பயிற்சி அளித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை விளாத்திகுளம் அட்மா திட்ட அலுவலர்கள் கோவிந்தராஜ் சுதாகர் கவுதமி ஆகியோர் செய்திருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேலூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை கலெக்டர் திடீர் ஆய்வு**



வேலூரில் பாதாள சாக்கடை பணிக்காக அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தையும், புதிய பஸ் நிலையத்தையும் கலெக்டர் நந்தகோபால் நேற்று திடீரென ஆய்வு செய்தார்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் சுமார் ரூ.40 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் வேலூர் மாநகரத்தில் வரும் கழிவுநீர் அனைத்தையும் சுத்திகரித்து அதனை விவசாயத்துக்கு பயன்படுத்துவது இந்த திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.9.93 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுத்திகரிக்கப்படும் நீர் பாலாற்றின் வழியாக ரூ.3.84 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் குழாய் மூலம் அலமேலுமங்காபுரம் பகுதி விவசாய நிலங்களுக்கு பயன்பாட்டுக்காக வேலவாடி ஏரியில் கொண்டு விடப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்தின் அனைத்து பணிகளும் முடிவடைந்து தயார் நிலையில் உள்ளது.

ஆனால் பாதாள சாக்கடை பணிகள் முடிக்கப்படாமல் உள்ளது. காட்பாடி சாலையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் உள்ளதால் பாதாள சாக்கடை பணிகள் முடிக்க முடியாமல் உள்ளதாக கூறப்படுகிறது.

கலெக்டர் ஆய்வு

இந்த நிலையில் வேலூர் முத்துமண்டபம் அருகில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை கலெக்டர் நந்தகோபால் நேற்று காலை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதுகுறித்து மாநகராட்சி கமிஷனர் ஜானகி, பொறியாளர் பாஸ்கரன் ஆகியோரிடம் விரைவில் பாதாள சாக்கடை பணிகளை முடித்து பயன்பாட்டுக்கு வர நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார். ஆய்வின் போது நகரமைப்பு அலுவலர் கண்ணன், நகர்நல அலுவலர் வசந்த்திவாகர் ஆகியோர் உடன் இருந்தனர். ஆய்வை முடித்து வெளியில் வந்தபோது முத்துமண்டபத்தை சேர்ந்த பொதுமக்கள் கலெக்டரிடம் தங்கள் பகுதியில் ரேசன் கடை கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் திறக்கவில்லை. இதுகுறித்து பலமுறை மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினார்கள். மனுவை பெற்ற கலெக்டர் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

பஸ் நிலையம்

முன்னதாக வேலூர் புதிய பஸ் நிலையத்தில் செல்லியம்மன் கோவில் பின்புறம் முட்புதராக இருந்த காலியிடத்தை சீரமைத்து அங்கிருந்து திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோவை போன்ற பகுதிகளுக்கு செல்லும் பஸ்கள்

செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் பணியை கலெக்டர் நந்தகோபால் நேரில் பார்வையிட்டார்.

**மூங்கில்துறைப்பட்டு பகுதியில் எள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



**மூங்கில்துறைப்பட்டு,**

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் எள் பயிரிடு வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின் றனர்.

<u>நிலத்தடி நீர்மட்டம் குறைவு</u>

கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால் ஏரி, ஆற்றுப்பாசனத்தை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் கடுமையாக பாதித்துள்ளனர். மேலும் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துள்ளதால் கிணற்று பாசன விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர்.

இந்த தண்ணீர் பிரச் சினையை சமாளித்து விவசாயம் செய்ய சொட்டுநீர் பாசனம் மற்றும் குறுகிய கால பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். மேலும் கிணற்று பாசனத்தை நம்பியுள்ள மூங்கில்துறைப் பட்டு பகுதி விவசாயிகள் தற்போது, குறுகிய கால பயிர்களான எள், மக்காச் சோளம், கேழ்வரகு போன்ற வற்றை பயிர் செய்கின்றனர்.

<u>எள் சாகுபடி</u>

குறிப்பாக இரவு நேர பனிப்பொழிவில் எள் செழித்து வளர்கிறது. இதற்கு தண்ணீர் செலவு, கூலி செலவு குறைவு என்பதால் மூங்கில்துறைப் பட்டு, பாக்கம்புதூர் மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் எள் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

**தேனி மாவட்டத்தில் பூசணிக்காய் விலை வீழ்ச்சி 1 கிலோ ரூ.7–க்கு விற்பனை**



**தேனி,**

தேனி மாவட்டத்தில் பூசணிக்காய் விலை வீழ்ச்சி அடைந்து உள் ளது. 1 கிலோ ரூ.7–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

<u>பூசணிக்காய் விலை வீழ்ச்சி</u>

தேனி மாவட்டத்தில், தேனி, வீரபாண்டி, உப்புக்கோட்டை, கோட்டூர், சின்னமனூர், பெரியகுளம், க.விலக்கு, மயி லாடும்பாறை போன்ற இடங் களில் பூசணிக்காய் சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது. இங்கு விளையும் பூசணிக்காய்கள் தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், திண்டுக்கல், மதுரை, சென்னை போன்ற நகரங்களுக்கும், கேரள மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போது க.விலக்கு, வீரபாண்டி பகுதிகளில் பூசணிக்காய் நல்ல விளைச்சல் அடைந்து உள்ளன. ஆனால் அவற்றிக்கு போதிய விலை கிடைக்கவில்லை. கடந்த வாரம் 1 கிலோ ரூ.10 முதல் ரூ.12 வரை விற்பனை செய்யப்பட்டது. படிப்படியாக

விலை குறைந்து வந்த நிலையில் நேற்று ரூ.6 முதல் ரூ.8 வரை விற்பனை செய்யப்பட்டது.

**<u>எதிர்பார்த்த விலை இல்லை</u>**

விலை குறைந்து வருவதால் காய்களை பறிக்கும் கூலியாட் களுக்கு வழங்கும் கூலி, அவற்றை வெளியூர்களுக்கு கொண்டு செல்ல வாகன வாடகை மற்றும் சாகுபடிக்கு செலவு செய்த செலவுகளை கணக்கிடும் போது எதிர் பார்த்த விலை கிடைக்க வில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

அதேபோன்று 1 கிலோ புடலங்காய் ரூ.10–க்கும், பாகற்காய் ரூ.14 முதல் ரூ.16–க்கும், பீர்க்கங்காய் ரூ.16 முதல் ரூ.18–க்கும் என தோட்டத்தில் விளையும் காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டன.